MAY 2023 **U/ID 30622/UNL4A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடைதருக.

1. நாகரிக வளர்ச்சியின் குறியீடுகள் என அழைக்கப்படுபவை எவை?

2. இசையின் இருபெரும் பிரிவுகள் யாவை?

3. சங்க இலக்கியத்தில் நெடுநல்வாடையின் சித்திர வேலைபாடுகளை எழுதுக.

4. சங்க காலத்தில் சிற்பங்கள் செய்யப் பயன்படும் பொருள்கள் யாவை?

5. மத்திய பிரதேச பிம்பட்கா பகுதியில் பாறைகளைப் பற்றி ஆய்வு மேற்கொண்டவர்கள் யார்?

6. கற்பனை உருவங்கள் சிலவற்றைக் கூறுக?

7. பண்ணின் பிறப்பிடங்கள் யாவை?

8. கட்டடக் கலையில் ஒரு புரட்சியை உருவாக்கிய மன்னர் யார்?

9. "ஆலக் கோயில்" - பெயர்க் காரணம் தருக.

10. தேவாரத் திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

11. தோற் கருவிகள் சிலவற்றைக் கூறுக?

12. தமிழில் தோன்றிய முதல் மூன்று புதினங்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும்
200 சொற்களில் விடைதருக.

13. நுண்கலைகளின் பண்புகளை விளக்குக.

14. தமிழரின் ஓவியக்கலையை இலக்கியச் சான்றுடன் விவரி.

15. ஆகம வழிபாட்டு முறையை விளக்கி எழுதுக.

16. சோழர்களின் பிரதிமைகளை விளக்கி எழுதுக.

17. திராவிடக் கட்டடக் கலையின் வகைகளை விவரிக்க.

18. எதார்த்தப் புதினத்தின் தன்மைகளை மதிப்பிடுக.

19. சிற்ப நூல்களை விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு
500 சொற்களில் விடை தருக.

20. நுண்கலைகளின் தனித்தன்மைகளைத் தொகுத்துரைக்க.

21. பௌத்த, ஜைன காலச் சிற்பங்களின் அமைப்பினை விவரி.

22. இசைக் கருவிகளின் வகைகளைக் கூறி அவற்றைத் தொகுத்தாராய்க.

23. தெருக் கூத்தின் வகைகளை விவரி.

24. தமிழ் நாட்டுக் கோயில்களின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

———————